3. அறிவிப்பு—தொடர்ச்சி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இது வேறு. நீங்கள் மாற்றுத் தலைவர் பட்டியல் என்று ஒரு பட்டியலைப் படித்தீர்கள். அதிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் யாரேனும் இருக்கிறார்களா? அதிலே யாருடைய பெயரும் இடம் பெற வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சிங்காரம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : திரு. கே. சிங்காரம் என்று சொன்னீர்கள். திரு. ஆர். சிங்காரம் என்று சொல்ல வில்லை. திரு. கே. சிங்காரம் என்றுதான் படித்தீர்கள் திரு. ஆர். சிங்காரம் என்று படிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும் அது திரு. ஆர். சிங்காரம் தான். மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் திருத்திக் கொள்ளலாம்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விதி 56-லே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதம் தொடங்க இருக்கிற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு எழுத்து மூலமாகக் கொடுக்கப்படும்.

4. கவன ஈர்ப்பு.

பேராவூரணி பின்தங்கியோர் மாணவர் விடுதிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. ஆர்.சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணியில் உள்ள பின்தங்கியோர் மாணவர் விடுதி கட்டடம் இடிந்துள்ளது குறித்து'' மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் விடுதி அரசு கட்டிடத்தில் இயங்கி வந்தது. இவ்விடுதிக்கு கட்டிடம் ரூ. 1.90 இலட்சம் செலவில் கட்ட 1976-ல் அனுமதியளிக்கப்பட்டு தாட்கோவினால் (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம்) கட்டப்பட்டு 1977-ல் ஒப்படைக்கப்பட்டது. இவ்விடுதிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததாலும் மாணவர்கள் தங்குவதற்கு ஏற்றதல்ல என பொதுப் பணித்துறை கருத்து தெரிவித்ததாலும், இவ்விடுதி ஏற்கனவே தனியார் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்தை செப்பனிடவும் மற்றும் மராமத்து பணிகளுக்காகவும் ரூ. 1 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையினால் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே மாணவர்களின் பாதுகாப்பு கருதி, இவ்விடுதியை தனியார் கட்டிடத்திற்கு மாற்ற ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்தேன். அந்த அறிக்கையின்படி உடனடியாக தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுத்து, அந்த விடுதியைக் கட்டுவதற்காக ஒரு லட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட் மதிப்பீடு தயார் செய்து இருப்பதாக அறிக்கையில் பார்த்தேன் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் 1979-ல் கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் 1980-ல் ஒப்படைக்கப்பட்டது

[திரு. ஆர். சிங்காரம்] [1993 பிப்ரவரி 8

முற்பகல் 11.20

சுமார் 12 ஆண்டுக்காலம்தான் ஆகியிருக்கிறது. 12 வருடத்திற்குள்ளேயே இந்தக் கட்டிடம் இடிந்து விட்டதால், தமிழகத்தில் அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் எப்படி இருக்குமோ என்ற அச்சமும் பயமும் எனக்கு ஏற்படுகின்றது. ஆகவே இனிமேல் அந்தக் காலத்தில் அந்தக் கட்டிடத்தை யார் கட்டியது, எந்தக் கான்ட்ராக்டர் கட்டியது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் என்பதை நீங்கள் பரிசீலனை செய்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதுடன் இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாத அளவுக்கும், இப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டாத அளவுக்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, இந்தக் கட்டிடத்தினை கட்டுவதற்கான கால அவகாசம் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே விரைந்து இந்தக் கட்டிடத்தை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விரைவாக 3 மாதத்திற்குள் கட்ட முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ரூ. 1.90 லட்சம் செலவில் கடந்த 15 வருடத்திற்கு முன்பு அந்தக் கட்டிடம் கட்டப் பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவதற்கு முன்பாகவே அந்தக் கட்டிடத்தை கட்டியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு இருக்கிறது. இந்த மராமத்துப் பணி மற்றும் அந்தக் கட்டிடத்தை செப்பனிடும் பணி 3 மாதத்திற்குள்ளாகவே முடிக்கப்பட்டு விடும் என்பதை இங்கே அறிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இனிமேல் இதுபோன்ற கட்டிடங்கள் இப்படிப்பட்ட நிலையில் இல்லாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் சம்பந்தப்பட்ட கான்ட்ராக்டர்கள் மீதும் உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியான நடவடிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.